# எஸ்தர்

கால வரிசை

| | |
|---|---|
| 538**கி.மு** | சிறையிருப்பாளர்கள் செருபேபாலுடன் திரும்பினார்கள். |
| 473 | பெர்சியாவில் இருந்து கொண்டே எஸ்தர் யூதர்களைக் காத்துக் கொண்டார். |
| 457 | இன்னும் அதிகமானவர்கள் சிறையிருப்பாளர்கள் எஸ்றா தலமையில் திரும்பினார்கள். |
| 445 | அலங்கத்தை நெகேமியா கட்டினார். |

பின்னணி.

கோரேசு ராஜா 52 வருடங்களுப்பின்பு செருபாபேல் தலமையில் யூத சிறையிருப்பாளர்களை மீண்டும் யூதாவுக்குத் திரும்புவதற்கு கி.மு. 486 இல் அனுமதித்தார். (எஸ்றா1–2)இ அகாஸ்வேரு பெர்சிஜயாவின் ராஜாவானார். 478 இல் அகாஸ்வேரு ராஜா **எஸ்தர்** என்னும் பெயரைக் கொண்ட யூதப் பெண்ணைத் திருமணம் செய்தார். எப்படி எஸ்தருடைய திருமணம் நடைபெற்றது என்பது பற்றி எஸ்தர் புத்தகம் விரிவாக கூறுகின்றது. இந்தத் திருமணத்தின் மூலம் அகாஸ்வேருவால் யூதர்களுக்கு எதிராகத் தீட்டப்பட்ட சதியை முறியடித்து யூதர்களைக் காப்பாற்றினார். அர்த்தசஷ்தாவின் மகனாகிய அகாஸ்வேருவின் காலத்தில் அனேக யூதர்கள் எருசலேம் திரும்பினார்கள். (எஸ்றா 6–7 நெகே. 2). அனேக யூதர்கள் பெர்சியாவின் சாம்ராஜ்ஜத்தின் மற்றய நகரங்களிலும் பாபிலோனிலும் தங்கினார்கள்.

**எழுதியவர்**_- யார் என்று தெரியாது, ஆனாலும் மொர்தகாய் எழுதியி ருக்கலாம் என்று கருதப்படுகின்றது. மொர்தகாயின் எழுத்துக்கள் இதனை உறுதிப்படுத்துவதாக கருதப்படுகின்றது.(9:20)

## காலமும் இடமும்.

வேதாகமத்தில் நெகேமியாவுக்குப் பின்பு எஸ்த்தர் புத்தகம் வந்த போதி லும்,நெகேமியாபுத்தகத்தின் நிகழ்வுகளைவிட 30 வருடங்களுக்கு முன்பாக எஸ்தர் புத்தகத்தின் நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. அனேகமான நிகழ்வுகள் பெர்சியா சாம்ராஜ்ஜத்திலேயே இடம்பெற்றுள்ளன, விஷேசமாக பெரும் பாலான நிகழ்வுகள் பெர்சியாவின் அரண்மனையிலேயே இடம் பெற்றுள்ளன. ஏறக்குறைய 470 கிமு.இல் எழுதப்பட்டிருந்தது.

## நோக்கம்.

- பாபிலோனிலும்,பெர்சியாவிலிர்க்கும் யூதர்களை விசுவாசத்தில் உற்சாகப்படுத்துவதற்காக
- யூதாதேசத்திற்குத் திரும்பியுள்ள யூதர்ளுக்கு, யூதாவிற்கு வெளியே உள்ள யூதர்களையும் கர்த்தர் கவனிக்கிறார் என்பதைக் காண்பிப்பதற்காக.
- கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளைக் காத்துக் கொள்கிறார் என்பதை விளங்கப்படுத்துவதற்காக.

## விஷேட அம்சங்கள்.

- கர்த்தர் என்னும் பெயர் குறிப்பிடாத இரண்டு வேதாகமப்புத்தகங்களில் புத்தகங்களில் ஒன்று எஸ்தர், மற்றது உன்னதப்பாட்டு.
- பூரிம் என்னும் கொண்டாட்டத்தின் ஆரம்ப இடம் எஸ்தர் புத்தகமாகும், அத்துடன் வேறு எந்த வேதாகமப் புத்தகத்திலும் இது குறிப்பிடப் படவில்லை.

## சுருக்கம்.

1. எஸ்தரின் எழிற்சி (1–2)
2. வஸ்தி தள்ளப்படல் (1)
3. எஸ்தரின் தெரிவு. (2:1-18)

4. மொர்தகாய் தடுத்துவைக்கப்படலும், அரசன் காப்பாற்றப்படலும். (2:19-23)

## ஆமானின் பொய்கள்.(3–5)

1. யூதர்களைக் கலைக்கும்படி ஆமானின் கேள்வி(3)
2. எஸ்தரைத் தலையிடும்படி மொர்தகாயின் வேண்டுகோள். (4)
3. யூதர்களைத்தப்புவிக்கும்படி எஸ்த்தரின் வேண்டுகோள். (5)
4. விசுவாசத்தின் பரிசு. (6–10)
5. மொர்தகாயின் உண்மைக்காக கனப்படுத்தப்படல் (6)
6. ஆமானுடைய வஞ்சகத்திற்காக தூக்கிலிடப்படல். (7)
7. மொர்தகாய் உயர்த்தப்படல், அவருடைய மக்கள் காப்பாற்றப்படல்.(8:1–9:17)
8. பூரிம்.- பாதுகாக்கப்பட்டதற்காக கொண்டாடப்படல்.(9:18-32)
9. மொர்தகாய் நினைவு கூரப்படல்.(10)

## எஸ்தரின்எழிற்சி(1–2)

**1:1-8** ஒரு ஆறுமாதக் கொண்டாட்டம் பொன்னையும், புகழையும் பிரஸ்தாபிப்பதற்காக் கொண்டாடப்பட்டது. நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேரு ராஜா அனேக அதிகாரிகளை அழைத்து பெர்சியாவின் தலைநகரான சூசாவில் உள்ள அரண்மனையில் பொன் னையும், தன்னுடைய மகத்துவத்தையும் அறியப்பண்ணும்படி ஆறுமாத ங்களுக்கு கொண்டாட்டம் கொண்டாடினார்.(1:5-8).வேதாகமத்தில் இது பற்றிக் கூறப்படாமல் இருந்த போதிலும், அகாஸ்வேரு கிரேக்கத்தின்மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஒரு முயற்சி செய்தான் .490.கி.மு. ஆம் ஆண்டில் அகாஸ்வேருவின் தகப்பனாகிய தரியு கிரேக்கத்தினால் தோற்கடிக்கப்பட்டான். ஒரு கிழமைக்கொண்டாட்டம் 482இல் இடம்பெற்றது. அகாஸ்வேருவும் 480 இலும் 479 இலும் தோற்கடிக்கப்பட்டான். அகாஸ்வேரு இந்தியாவிலிருந்து எதியோப்பாவரையிலான ஒரு பெரிய சாம்ராஜ்ஜத்தையே கட்டிக்காத்து வந்தான்.(1:1).

<u>1:9-22 இராணி வஸ்தி மறுத்ததினால் தள்ளப்பட்டாள்.</u>

ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும் போதுஇ மகாரூப வதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படிஇ ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாகஇ அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்து வரவேண்டுமென்றுஇ ராஜாவாகிய அகாஸ்வேருவின் சமுகத்தில் சேவிக்கிற மெகுமான்இ பிஸ்தாஇ அற்போனாஇ பிக்தாஇ அபக்தாஇ சேதார்இ கர்காஸ் என்னும் ஏழுபிரதானிகளுக்கும் கட்டளையிட்டான். ராஜாவாகிய அகாஸ்வேரு பிரதானிகள் மூலமாய்ச் சொல்லியனுப்பின கட்டளையின்படி ராஜ ஸ்திரீயாகிய வஸ்தி செய்யாமற் போனதினிமித்தம்இ தேசச்சட்டத்தின்படி அவளுக்குச் செய்ய வேண்டியது என்ன என்று தன்னுடைய ஆலோசகர்களைக் கேட்டான். இவளைப் போல பெர்சி யாவில் உள்ள மற்ற ஸ்திரிகளும் தங்கள் கணவன்மாரை அற்பமாக எண்ணாத படிக்கு, அவளை உடனடியாக விவாகரத்துச் செய்யும்படியும் ஆலோசனை வழங்கினார்கள். அகாஸ்வேரு அதற்கு இணங்கி அவளை விவாகரத்துச் செய்தான். ராஜாவுக்குச் சம்மதியாயிருந்தால் இ வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு முன்பாகவரக்கூடாது என்றும்இ அவளுடைய ராஜ மேன்மையை அவளைப்பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு ஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்றும்இ அவரால் ஒரு ராஜகட்டளைபிறந்துஇ அது மீறப்படாதபடிக்குஇ பெர்சியாவுக்கும் மேதியாவுக்கும் உரியதேசச் சட்டத்திலும் எழுதப்படவேண்டும் முடிவாகியது. இந்தச் சட்டமானது பெர்சியாவில் முக்கிய பங்கு வகித்தது. இது பெர்சியா-மேதியாவின் நாகரீகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சிலவேதாகம வல்லுனர்கள் கூறுகின் றார்கள்.( 2:1-14, 8:1-8). தங்களுடைய சட்டங்கள் எதுவும் தவறானது என்று யாரும் நினைப்பதில்லை.

2:1-14 இவைகளுக்குப் பின்புஇ ராஜாவாகிய அகாஸ்வேருவின் உக்கிரம் தணிந்த போதுஇ அவன் வஸ்தியையும் அவள் செய்ததையும் அவளைக் குறித்துத் தீர்மானிக்கப்பட்டதையும் நினைத்தான். (2:1). இருந்தாலும், பெர்ச்சியாவின் சட்டத்திற்கு அரசனும் கட்டுப்பட்டே ஆகவேண்டும். (1:19) அரசனின் துக்கம் இல்லாமல் போவதற்காக ,மிகவும் அழகான யுவதியைத் தேடும் படியும்,அவள், வஸ்த்திக்குப்பதிலாக இராணி ஆக்கப்படல் வேண்டும் என்று கருத்து வெளியிடப்பட்டது. போட்டியாளர்களில் ஒருவராக எஸ்தர் என்ற பெயருடைய யூதஸ்த்ரியும் இருந்தாள். அவளுடைய மாமனாராகிய மொர்தகாயின் ஆரோசனைப்படி தன்னுடைய யூத இனம் என்பதை அவள் மறைத்து வைத்தாள்.

2:15-18 .இந்த யூதப் பெண்மணியான எஸ்தர் போட்டியில் வெற்றி

பெற்று முடிசூடப்பட்டாள். அவளுடைய சுத்திகரிப்புக் காலம் முடிந்தவுடன், எஸ்தர் புதிய ராணியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டாள்.

2:19–23
அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிறபோதுஇ வாசல்காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும் தேரேசும் வர்மம் வைத்துஇ ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கை போட வகை தேடினார்கள். இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரிய வந்ததினால்இ அவன் அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான் எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள். அந்தக்காரியம் விசாரிக்கப்படுகிறபோதுஇ அது மெய்யென்று காணப்பட்டது ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப் போடப்பட்டார்கள் இதுராஜ சமுகத்திலே நாளாகமப் புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

## ஆமானின் பொய்கள். (3–5)

3:1-11 "நான்கு வருடங்களுக்குப் பின்பு, அகாஸ்வேரு தன்னுடைய பிரதம மந்திரியாக ஆமான் என்னும் பெயருடைய ஒரு கொடியவனை நியமித்தான்.

ஆமானை, சகல உத்தியோகத்தரும் தலை வணங்கிக் கொளரவிக்க வேண்டும் என்று கேட்டிருந்தான், ஆனால் மொர்தகாய் தான் ஒரு யூதனாக இருப்பதனால் அப்படிச் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்தான்.

ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோதுஇ மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின் மேல் மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால்இ அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான். இதனை தனிப்பட்டபடி ராஜாவிற்கு ஆமான் தெரியப்படுத்தினான், அந்த இனப்படு கொலை செய்வதற்கு ராஜாவும் சம்மதம் தெரிவித்தார். ஆமான் அதற்கான நாளை சீட்டுப் போட்டுத் தெரிந்து கொண்டான்(3:7)இஇந்த இனப்படு கொலையானது 12 ம் மாதம் நடைபெறும் என்று எழுதப்பட்டது, இதனை அகாஸ்வேரு ராஜாவும்

அதன் விளைவை அறியாமல் சம்மதம் தெரிவித்து ஒப்பம் வைத்துவிட்டார்.(3:8-11)!

3:12-15 முதலாம் மாதம் பதின் மூன்றாந்தேதியிலேஇ ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள் ஆமான் கற்பித்தபடியெல்லாம் ராஜாவின் தேசாதிபதிகளுக்கும்இ ஒவ்வொருநாட்டின் மேல்வைக்கப்பட்டிருந்த துரைகளுக்கும்இ ஒவ்வொரு ஜனத்தின் பிரபுக்களுக்கும்இ அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும்இ அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும் எழுதப்பட்டது ராஜாவாகிய அகாஸ்வேருவின் பேரால் அது எழுதப்பட்டுஇ ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டது. ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம்பதின் மூன்றாந் தேதியாகிய ஒரேநாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும்இ அவர்களைக் கொள்ளையிடவும்இ அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது. ராஜாவும் ஆமானும் குடிக்கும்படி உட்கார்ந்தார்கள் சூசான் நகரம்கலங்கிற்று.

4:1-9 நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோதுஇ மொர்தெகாய் தன் வஸ்திரங் களைக்கிழித்துஇ இரட்டுடுத்திஇ சாம்பல் போட்டுக் கொண்டுஇ நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய்இ துயரமுள்ள மகாசத்தத்துடனே அலறிக் கொண்டிருந்தான். யூதர்களும் இந்தச்சட்டத்தை அறிந்து மிகுந்த துக்கத்துடன் இருந்தார்கள். எஸ்தரின் தாதிமார்களும்இ அவளுடைய பிரதானிகளும் போய்இ அதை அவளுக்கு அறிவித்தார்கள் அதினாலே ராஜாத்தி மிகவும் துக்கப்பட்டுஇ மொர்தெகாயிடம் ஆட்களை அனுப்பி என்ன நடந்தது என்பது பற்றி அறிய முயற்சித்தாள். மொர்தகாய் யூதர்களை அழிக்கும்படி சட்டம் அமைக்கப்பட்டு சகல தேசங்களுக்கும் அனுப்பப்பட்டுவிட்டது என்ற செய்தியை அவளுக்கு அறிவித்தான். அத்துடன் யூதர்களுக்கா ராஜாவிடம் பேசும்படி எஸ்தரைக் கேட்டுக் கொண்டான்.

4:10-17. அழைக்கப்படாமல் ராஜாவின் முன்னிலையில் செல்வது உடனடி மரணத்தை ஏற்படுத்தும் என்பதை மொர்கதாய்க்கு எஸ்தர் சொல்லியனுப்பினாள். மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச்சொன்னது: நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால்இ மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்கஇ நீ தப்புவாயென்று உன்மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால்இ யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்இ அப்பொழுது நீயும் உன்தகப்பன் குடும்பத்தாரும்

அழிவீர்கள் நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும் படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமேஇ யாருக்குத் தெரியும்இ என்று சொல்லச் சொன்னான். எஸ்தர் ராஜாவை அணுகி விடயத்தைச் சொல்வதற்குச் சம்மதித்தாள். அப்படி தான் சந்திப்பதற்காக ஜனங்களை ஜெபத்தில் இருக்கும்படி வேண்டிக் கொண்டாள். வயது வேறுபாடில்லாமல் நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு இச் சம்பவங்கள் ஒரு எடுத்துக்காட்டு. இதுவரை மொர்கதாய் எஸ்தருக்கு ஆலோசனை சொன்னார். இப்போது எஸ்தர் மொர்கதாய்க்கு ஆலோசனை கூறுகின்றார் அதை அவரும் ஏற்றுக்கொண்டார்.

5:1-8 எஸ்தர் திடீர் எனத் தன்னிடம் வந்ததைக்குறித்துக் குழப்பம் அடையாமல், அகாஸ்வேரு ராஜா அவளை அன்புடன் வரவழைத்தான். அவளுக்கு என்ன தேவை என்றும், அது ராஜ்ஜித்தின் பாதியாக இருந்தாலும் தருவேன் என்றும் வாக்குப் பண்ணினான். இந்தநாளில் தான்வைக்கப்போகும் விருந்துபசாரத்திற்கு, ஆமானுடன், அரசனை வரும்படி அழைத்தாள். இந்த அழைப்புக்கு அவர்கள் விருந்தில் பங்குபற்றிய பின்பும், எஸ்தர் அவளுடைய வேண்டுகோலைச் சொல்ல மறுத்து, இரண்டாவது விருந்துபசாரத்திற்கும் அழைத்தாள்.

5:9-14.இரண்டாம் முறை எஸ்தர் தன்னை எஸ்தர் விருந்துக்கு அழைத்ததையிட்டு ஆமான் மிகுந்த சந்தோசம் அடைந்தான். ஆனாலும் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற மொர்தெகாய் தனக்கு முன் எழுந்திராமலும் அசையாமலும் இருக்கிறதை ஆமான் கண்டபோதுஇ அவன் மொர்தெகாயின்மேல் உக்கிரம் நிறைந்தவனானான். அப்பொழுது அவன் மனைவியாகிய சிரேஷும் அவனுடைய சிநேகிதர் எல்லாரும் அவனைப்பார்த்து: ஐம்பது முழ உயரமான ஒருதூக்குமரம் செய்யப்படவேண்டும் அதிலே மொர்தெகாயைத் தூக்கிப் போடும்படி நாளையதினம் நீர் ராஜாவுக்குச் சொல்லவேண்டும் பின்பு சந்தோஷமாய் ராஜாவுடனே கூடவிருந்துக்குப் போகலாம் என்றார்கள் இந்தக் காரியம் ஆமானுக்கு நன்றாய்க் கண்டதினால் தூக்குமரத்தைச் செய்வித்தான்

## விசுவாசத்தின் பரிசு (6–10)

6:1-3 ராஜாவுக்கு நித்திரை வரவில்லை, அதனால் நாளாந்தம் நடந்த பிரச்சனைகளைப் பதிவுசெய்த புத்தகத்தை வாசிக்கும்படி கட்டளையிட்டார்.

இதில் மொர்தகாய் எப்படி தன்னடைய உயிரைக் காப்பாற்றினார் என்பதைப்பற்றி எழுதப்பட்டிருந்தது. ஆனால் இதற்காக மொர்தகாய் கனப்படுத்தப்படவில்லை என்பதை ராஜா அறிந்து கொண்டான்.( 2:19-23).

6:414 ஆமான் தான் செய்த தூக்குமரத்திலே மொர்தெகாயைத் தூக்கிப்போடவேண்டு மென்றுஇ ராஜாவிடத்தில் பேசும்படி ராஜ அரமனையின் வெளி முற்றத்திலே வந்திருந்தான். அப்பொழுது ராஜா: முற்றத்திலிருக்கிறது யார் என்று கேட்டான். ஆமான் உள்ளேவந்த போதுஇ ராஜா அவனைநோக்கி: ராஜா கனம் பண்ணவிரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று கேட்டான் அதற்கு ஆமான்இ என்னையன்றிஇ யாரைராஜா கனம்பண்ண விரும்புவார் என்றுதன் மனதிலேநினைத்துஇ ராஜாவைநோக்கி: ராஜாகனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்இ ராஜா உடுத்திக் கொள்ளுகிற ராஜவஸ்திரமும்இ ராஜா ஏறுகிற குதிரையும்இ அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும். அந்த வஸ்திரமும் குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படவேண்டும் ராஜாகனம் பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்தபின்இ அவனைக்குதிரையின் மேல் ஏற்றி இநகர வீதியில் உலாவும் படிசெய்துஇ ராஜா கனம் பண்ண விரும்பு கிறமனுஷ னுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்படவேண்டும் என்றான். செய்தான். ஆமான் தனக்கு நேரிட்ட எல்லாவற்றையும் தன் மனைவியாகிய சிரேஷுக்கும் தன் சிநேகிதர் எல்லாருக்கும்அறிவித்தபோதுஇ அவனுடைய ஆலோசனைக்காரரும் அவன் மனைவியாகி சிரேஷுக்கும் அவனைப் பார்த்து: மொர்தெகாய்க்கு முன்பாக நீர்தாழ்ந்து போகத் தொடங்கினீர் அவன் யூதகுலமானால்இ நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவது நிச்சயம் என்றார்கள். அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதேஇ ராஜாவின்பிரதானிகள் வந்துஇ எஸ்தர் செய்த விருந்துக்கு வர ஆமானைத் துரிதப்படுத்தினார்கள். (6:13).

7:1-10 அகாஸ்வேரு ராஜாவுக்கும், ஆமானுக்கும் வழங்கப்பட்ட விருந்தில், தன்னுடைய ஜனத்திற்கு விரோதமாகச் செய்யப்படும்

எஸ்தர்.

சதிபற்றி ராஜாவுக்கு எஸ்தர் விபரமாகக் கூறினாள். அத்துடன் அவர்களைக் காக்கும்படியும் விண்ணப்பம் பண்ணினாள். ஆமான் தான் இந்தச் சதியைச் செய்கிறான் என்பதை எஸ்த்தர் சுட்டிக் காட்டினான். ராஜா மிகுந்த போத்துடன் வெளியே போனான் (7:7-8) ராஜா அரமனைத் தோட்டத்திலிருந்து திராட்சரசம் பரிமாறப்பட்ட இடத்துக்குத் திரும்பிவருகையில்இ எஸ்தர் உட்கார்ந்திருக்கிற மெத்தையின்மேல் ஆமான் விழுந்து கிடந்தான் அப்பொழுது ராஜா: நான் அரமனையிலிருக்கும் போதே என்கண் முன்னே இவன் ராஜாத்தியைப் பலவந்தம் செய்யவேண்டுமென்றிருக்கிறானோ என்றான் இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து பிறந்தவுடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள். அப்பொழுது ராஜசமுகத்தில் இருக்கிற பிரதானிகளில் அற்போனா என்னும் ஒருவன்: இதோஇ ராஜாவின் நன்மைக் காகப் பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பதுமுழ உயரமான தூக்குமரம் ஆமானின் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்றான் அப்பொழுது ராஜா: அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள் என்றான். அப்படியே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம் பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப்போட்டார்கள் அப்பொழுது ராஜாவின் உக்கிரம் தணிந்தது.

அன்றைய தினம் அகாஸ்வேரு ராஜா யூதரின் சத்துருவாயிருந்த ஆமானின் வீட்டை ராஜாத்தியாகிய எஸ்தருக்குக் கொடுத்தான் மொர்தெகாய் ராஜ சமுகத்தில் வந்தான் அவன் தனக்கு இன்ன உறவு என்று எஸ்தர் அறிவித்திருந்தாள். முன்பு ஆமானால் எழுதப்பட்ட சட்டத்தை நீக்கும்படி புதிய கட்டளையை எழுதி தேசங்களுக்கு அனுப்பும்படி ராஜாவிடம் எஸ்தர் மன்றாடினாள். எஸ்தரையும், மொர்தகாயையும் தங்களுக்கு வேண்டிய விதமாக கட்டளையை எழுதும்படி ராஜா எஸ்த்தருக்கு கூறினார் .பெர்சியாவில் எழுதப்பட்ட சட்டம் மாற்ற முடியாதது என்று ராஜா கூறினான். (1:19 2:1-1)

<u>8:9-17 புதிய சட்டம். உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.</u>
மொர்தகாயின் வழிகாட்டலில், ராஜாவின் எழுத்தாளர்களினால், யூதர்கள் தங்களைத் தாக்கவரும் எவரையும் திருப்பித்தாக்கித் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்ற சட்டத்தை எழுதி அனுப்பினார்கள். இந்தப் புதிய சட்டம் யூதர்கள் மத்தியில் **மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.**

,மொர்தகாய், ரஜவஸ்த்திரம் அணித்து வெளியில் வந்தபோது சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது.(8:15). இந்தச் சட்டம் அனேக யூதர் அல்லாதவர்களையும் யூதமார்க்கத்தில் இணையவைத்தது. (8:17).

திட்டமிட்ட இனப்படுகொலையின் நாள் வந்தபோது யூதர்களை மேற் கொள்வதற்குப் பதிலாக, எதிர் விளைவுகள் ஏற்பட்டது. (9:1)இயூதர்கள் அவர்களின் எதிரிகளைத் தோற் கடித்தார்கள். நாடுகளின் சகல அதிகாரிகளும்இ தேசாதிபதிகளும்இ துரைகளும்இ ராஜாவின் காரியங்களை நடப்பிக்கிறவர்களும்இ யூதருக்குத் துணை நின்றார்கள் மொர்தெகாயினால் உண்டான பயங்கரம் அவர்களைப் பிடித்தது. (9:3).மொர்தகாயின் செல்வாக்கு சாம் பிராஜ்ஜத்தில் அதிகரித்து வந்ததினால், அதிகாரிகள் யூதர்களுக்கு ஒத்தாசையாக இருந்தார்கள். யூதர்கள் 75000 எதிரகளைக் கொன்றுகுவித்தார்கள். ஆமானுடைய 10 மகன்மாரையும் கொலை செய்தார்கள். இரண்டாம் நாளிலும் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றது. (9:11-15)இயூதர்கள் சாம்ராஜ்ஜம் முழுவதிலும் தங்கள் வெற்றியைக் கொண்டாடினார்கள். (9:16-17). ஆமான் உள்பட யூதர்கள் பல எதிரிகள் யூதர்களுக்கு இருந்தார்கள் என்பதை இந்த யுத்தம் காண்பித்தது. (9:1இ 16).

9:18-32.இரண்டு நாள் யுத்தத்திற்குப் பிற்படு, யூதர்கள் சூசானில் வெற்றியைக் கொண்டாடினார்கள். யூதர்கள் எல்லாரும் இந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு பண்டிகையைக் கெண்டாடினார்கள், அதற்கு பூரீம் என்று பெயரிட்டார்கள். (9:26) ஆமான் பூர் என்னும் சீட்டுப் போட்டு, யூதர்களுக்கு எதிரான யுத்தத்தின் நாளைக்குறித்தான். ( 3:7). (9:29-32). மொர்தகாயின் சட்டத்தை உறுதியாகப் பற்றும்படி எஸ்தர் வேண்டிக் கொண்டாள். பூரிம் கட்டாயம் கொண்டாடப்பட்டு, உபவாசித்து, பரிசுகள் கொடுதுக் கொண்டாடப்படல் வேண்டும். (9:18-19).

10:1-3 அகாஸ்வேருவின் ராஜ்ஜத்தில் மொர்தகாய் இரண்டாம் அதிகாரியாக இருந்தார். அவர் ஞானமாக தலமைதாங்கி நடத்தியபடியால் யூதர்கள் யூதர்கள் அல்லாதோர் மத்தியிலும் அவனுக்கு அதிகமதிப்பு உண்டாயிற்று. ஏழைகள் தேவையுள்ள மக்கள் மீது மொர்கதாய் கரிசனையுள்ளவராயிருந்தார்.

## எஸ்தர் புத்தகத்திலிருந்து ஞாபகப்படுத்தப்படும் நபர்கள்.

எஸ்தர்.

<u>எஸ்தர் முக்கிய விடயங்கள்:-</u> நாடுகடத்தப்பட்ட எஸ்தர். பெர்சிய சாம்ராஜ்ஜத்தின் இராணியானாள். இனப்படுகொலையிலிருந்து தன்னுடைய மக்களைப் பாதுகாத்தவள். (2:17 7:3-6 8:3-8)

தகப்பன்:- அபிகாயில். (2:15)

கணவன்:- அகாஸ்வெரு 2:16-17)

## எஸ்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பாடங்கள்.

- கர்த்தர் எஸ்த்தரை அரண்மனைக்குக் கொண்டுவந்தது பெர்சியா ராஜ்ஜியத்தின் மேன்மைக்காகவாகும். "நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமேஇ (4:14). இதைப் போலவே விசுவாசிகளும் இப்போது அமர்த்தப்பட்ட இடங்கள் கர்த்தரை மகிப்படுத்துவதற்காகவேயாகும். "ஏனெனில்இ நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுஇ தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்". (எபே. 2:10).
- மற்றவர்களுடைய சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும், கர்த்தரிடத்தில் வேண்டுகொள் செய்வதற்காக கர்த்தரால் தெரிவு செய்யடுதல். (4:10-16).

**திறவு கோல் வசனம்**:-. நீர் போய்இ சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்துஇ மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்துஇ எனக்காக உபவாசம்பண்ணுங்கள் நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் இவ்விதமாக சட்டத்தை மீறிஇ ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன் நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள். (4:16).

**ஆமானின் முக்கிய நிகழ்வுகள்.** : அகாஸ்வேருவின் அதிகாரத்துடன் யூதர்களை அழிப்பதற்குத் திட்டம் தீட்டினான் (3:1-9)

**தகப்பன்**: அம்மெதாத்தா(3:1)

**மனைவி** : சிரேஷு (5:14)

எஸ்தர்.

**ஆண் பிள்ளைகள்** : பர்சான்தாத்தாஇ தல்போன்இ அஸ்பாதாஇ பொராதாஇ அதலியாஇ அரிதாத்தாஇ பர்மஷ்டாஇ அரிசாய்இ அரிதாய்இ வாய்சாதா(9:7-10)
மரணம். : 7:10 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆமானிடமிருந்து கற்றவேண்டி ஆவிக்குரிய பாடங்கள்.**

- கர்த்தர் தன்னுடய பிள்ளைகளைக் காப்பாற்றுகிறார். ( ஆதி. 12:3எச. 54:17):
- கர்த்தருடைய பிள்ளைகள் அமிழ்ந்து போகமட்டார்கள் என்று பார்வோன் கற்றுக் கொண்டான். (யாத். 14).
- அவர்கள் எரிந்து போக மாட்டார்கள் என்று நேபுகாத் நேச்சார் கற்றுக் கொண்டான். (தானி. 3).
- அவர்கள் சிங்கங்களினால் சாப்பிடப்படமாட்டார்கள் என்று தரியு கற்றுக் கொண்டான். (தானி. 6).
- அவர்கள் துக்கிலிடப்பட மாட்டார்கள் என்று அமான் அறிந்து கொண்டார். (5:14 7:10).
- ஆமானுடைய கோபம் கர்த்தருடைய மகிமையை விளங்கப்பண்ணும் மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர். (சங். 76:10).
- நாம் எதை விதைக்கிறொமோ அதையே அறுக்கின்றோம். (5:14 7:10நீதி. 26:27 ஓசி. 8:7 கலா. 6:7).

**திறவுகோல் வசனம்.** ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோதுஇ மூர்க்கம் நிறைந்தவனானான். ஆனாலும் மொர்தெகாயின்மேல் மாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபடியால்இ அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான். (3:5-6).

**மொர்கதாயின் முக்கிய சம்பவங்கள்.** : நாடுகடத்தப்பட்ட இஸ்ரவேலன்.எஸ்தரின் உறவினர். இ யூதர்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு எஸ்தருக்கு ஒத்தாசையாக இருந்தவர்.பெர்சியாவின் பிரதம மந்திரியானவர். (2:7 4:1-14 10:3)

எஸ்தர்.

**தகப்பன்.** யாவீர்: (2:5) **மொய்கதாயிடமிருந்து ஆவிக்குரிய பாடம்**- நற்செயல்களுக்கான வெகுமதி காலம்தாழ்த்தியாகிலும் கிடைக்கப் பெற்றவர். (2:21-23 6:1-11).

- நல்ல காரணத்திற்காக நாம் பேசாமல் இருக்க்க் கூடாது, மொர்கதகாய் தன்னுடைய மக்களின் அழிவை வெளியரங்கமாக்கினான். . (4:1-3) எஸ்தரின் உதவியை நாடினான் (4:7-8 அவள் தாமதித்தபோது, அதனை உடனடியாகச் செய்யும்படி வலியுறுத்தின்ன். (4:13-14). தேசம் காப்பாற்றப்பட உதவினார்.
-

**திறவு கோல் வசனம்.** மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச்சொன்னது: நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால்இ மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்கஇ நீ தப்புவா யென்று உன் மனதிலே நினைவுகொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால்இ யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்இ அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள் நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயி ருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமேஇ யாருக்குத் தெரியும்இ என்று சொல்லச்சொன்னான். (4:13-14)

**அகாஸ்வேருவின் முக்கிய சம்பவங்கள்.**

பெர்சியாவின் ராஜா, எஸ்தரை திருமணம் செய்தவர். (1:1-3 2:15-18)

மனைவிகள், : வஸ்தி, எஸ்தர் (1:9 2:15-18)

**அகாஸ்வேருவிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**.

கவனமில்லாத செயற்பாடுகள் நீண்டகால விளைவுகளைக் கொண்டுவரும்.

புத்தியீனமாக திடீரென எடுத்த முடிவினால் ஒருமனைவியை இழந்தார்,(1:10-22) அத்துடன் இரண்டாவது மனைவியும் மரணம்வரைசென்று காப்பாற்றப்பட்டாள். (2:10 3:8-15). அவசரமுடிவுகள் மனவருத்தைக் கொண்டுவரும். • திருமணத்தின் அத்திவாரம் அன்பாகும். . அகாஸ்வேரு எஸ்தரை நேசிக்கவும் கனம்பண்ணவும் தவறிவில்லை (2:17 5:1-3 எபே. 5:25 1 பேது. 3:7).

எஸ்தர்.

**திறவுகோல் வசனம்.** ராஜா அவளை நோக்கி: எஸ்தர் ராஜாத்தியேஇ உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும்இ உனக்குக் கொடுக்கப்படும் என்றான். (5:3)

நன்றி கர்த்தாவே

திராணி